**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலன் – 2023–2024–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை – புதிய அறிவிப்பு – ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மையின மக்களுக்கு மின்மோட்டாருடன் கூடிய 2500 தையல் இயந்திரங்கள் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிநஆபி1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.37 | நாள் 30.05.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
வைகாசித் திங்கள் 16–ஆம் நாள்

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 09.12.2021.
2) அரசாணை (நிலை) எண்.18, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 13.03.2023.
3) சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடித எண். அ6/ 1338 / 2023, நாள் 18.04.2023.

***

**ஆணை:–**

2023–24–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

> "ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஏதுவாக ஒரு தையல் இயந்திரம் ரூ.6400 மதிப்பில் 2500 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்."

2. முன்னதாக, முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் அனைத்து மாவட்டங்களில் உள்ள சிறுபான்மையினர் இனத்தவருக்கு மின்மோட்டாருடன் கூடிய 1000 தையல்

இயந்திரங்கள் கடந்த 2022–2023–ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட தகுதிகளுக்குட்பட்டு வழங்க ஆணையிடப்பட்டது:–

i) தையல் கலை பயின்றவராக இருக்க வேண்டும் மற்றும் தையல் கலை பயின்றதற்கான உரிய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

ii) ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1,00,000/– ஆக இருத்தல் வேண்டும்.

iii) வயது வரம்பு – 20 முதல் 45 வரை.

iv) கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் போன்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

v) ஒரு முறை தையல் இயந்திரம் பெற்றிருப்பின் மீண்டும் தையல் இயந்திரம் பெற 7 ஆண்டுகள் கடந்த பின்னரே தகுதி உடையவராக கருதப்படுவர்.

vi) இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் பயனாளிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமிருந்து உரிய விண்ணப்பங்கள் பெற்று தகுதி இருப்பின் முன்னுரிமை அடிப்படையில் தையல் இயந்திரங்களை பெறலாம்.

3. அதனைத் தொடர்ந்து, மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஏதுவாக 2500 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்களை கொள்முதல் செய்து வழங்கிடும் பொருட்டு ரூ.1,60,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுமாறு சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் கோரியுள்ளார்.

4. சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, 2023–24–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பை செயற்படுத்தும் விதமாக, ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஏதுவாக 2500 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்களை கொள்முதல் செய்து, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்ட தகுதிகளுக்குட்பட்டு, வழங்கிடும் பொருட்டு ரூ.1,60,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 04 – சிறுபான்மையினர் நலன் – 102 – பொருளாதார முன்னேற்றம் – மாநிலச் செலவினங்கள் – AA – சிறுபான்மையினருக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்குதல் – 319 – இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்.

(IFHRMS ததொகு: 2225 – 04 – 102 – AA – 31901)"

6. சிறுபான்மையின மக்களுக்கு மின்மோட்டாருடன் கூடிய 2500 தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்கிட, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம், 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000 (Tamil Nadu Transparency in Tenders Act, 1998 மற்றும் Tamil Nadu Transparency in Tenders Rules, 2000) ஆகியவற்றைப் பின்பற்றி விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்திடுமாறு சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே, பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவுத் தொகையினை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,60,00,000/-, 2023-2024-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று, செலவினத்தை மேற்கொள்ள சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (பி, மிபி (ம) சிந/ வ.செ.பொது-1) துறைக்கு அனுப்பி வைக்குமாறும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண். 21218/நிதி (பி, மிபி (ம) சிந)/2023, நாள் 30.05.2023-இல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 183 (நூற்று எண்பத்தி மூன்று) (IFHRMS ASL No.2023050183)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மங்கத் ராம் சர்மா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன்,
சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்,
சென்னை, வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர்.
மாநில கணக்காயர், சென்னை-18
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.

<u>நகல்</u>

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்
தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நிதி (பி, மிபி (ம) சிந / வ.செ.பொ. I / II / வ.வ.I) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின்
முதுநிலை முதன்மை தனிச்செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை,
சென்னை–9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை,
சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/5/23

பிரிவு அலுவலர்